# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No. 13/2013

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.3 வாக்குமூலம் 1969-ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 05.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெங்கராஜன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | வேம்புகண்ணன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

பி.சா. 3 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் 3 வது சாட்சியாவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறியீடு விவரம் |
|---|---|---|---|
| 1 | 27.02.1996 | (வாதி தரப்பில் கடந்த 27.02.1996 ல் ஏற்பட்ட பத்திரத்தில் பிரதிவாதி கோவிந்தராஜ் மற்றும் வாதி தங்கமணிக்கும் இடையே எவ்வித உடன்படிக்கையும் ஏற்பட்டதாக அந்த ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றும், | பி.சா.ஆ.6 |

| | | | |
|---|---|---|---|
| | | வாதி தங்கமணி என்பவரால் எழுதிக் கொடுக்கப் பட்டதாகவும் சொல்லப்படவில்லை என்றும், இந்த ஆவணம் பி.சா.1 கட்டுப்பாட்டின் கீழ் இருந்து அவர் மூலமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தாகவும், ரெங்கராஜன் பெயரிலுள்ள ஆவணம் கோவிந்தராஜனிடம் எவ்வாறு வந்தது என்பது குறித்து சொல்லப்படவில்லை என்றும், இந்த ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதி கோவிந்தராஜனுக்கு பத்திரம் எழுதிக் கொடுப்பதாக சொல்லப்படவில்லை என்றும், உரிய பத்திரத்தில் எழுதப்படவில்லை என்றும், அதிலுள்ள கையொப்பம் வாதி தங்கமணியின் கையொப்பம் அல்ல என்றும், நிரூபண வாக்குமூலத்தில் ரூ.17,23,000/- வாதியிடம் செலுத்தப்பட்டதாக சொல்லப் பட்டுள்ளது. ஆனால் ஆவணத்தில் அவ்வாறு சொல்லப் படவில்லை என்றும், ரெங்கராஜன் வேறு ஒரு வழக்கில் தரப்பினராக இருப்பதாக கூறி ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப் படுகிறது. மேற்கண்ட ஆவணத்தின் செல்லுந்தன்மை குறித்து தீர்ப்பின் போது தீர்மானிக்கப்படும் என்பதன் அடிப்படையில் குறியீடு செய்யப்படுகிறது) | |

(ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.14 10:46:13 +0530

District Munsif

Mannargudi.